# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone: 044–2838 9038; email: registrar@tnteu.ac.in; Website: www.tnteu.ac.in


**Lr. No.TNTEU/R/Elig./B.Ed Admission 2018-19/ 1936** **Date: 12.09.2018**

முனைவர் நா.ரவீந்திரநாத் தாகூர், Ph.D
பதிவாளர்(பொ)

பெறுநர்
முதல்வர்கள்,
இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** கல்வி ஆண்டு 2018-2019 – பி.எட் சேர்க்கை – பல்கலைக்கழக இணைவு பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - பி.எட் சேர்க்கைப் பெற்ற மாணவர்களது அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பு பணிகள் - கூடுதல் தகவல்கள் அறிவித்தல் - தொடர்பாக.

பார்வை: இப்பல்கலைக்கழக கடித எண்:TNTEU/R/Elig./B.Ed Admission 2018-19/234, நாள் 05.09.2018.

------

பார்வையில் கண்ட இப்பல்கலைக்கழகக் கடிதம் வாயிலாக, நடப்பு கல்வி ஆண்டில் (2018-2019) பி.எட் பட்டப்படிப்பில் சேர்க்கைப்பெற்ற அனைத்து மாணவர்களது அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்புப் பணிகள் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ள கால அட்டவணை மற்றும் அச்சமயம் சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் சமர்ப்பிக்க வேண்டிய பல்வேறு ஆவணங்களின் விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

மாணவர்கள் வகுப்புகளுக்கு வராமலும், கல்லூரியில் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் இல்லாமலும், பல சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் பி.எட் படிப்பை நடத்துவதாக பல்கலைக்கழகத்திற்கு வந்துள்ள புகார்களின் மூலம் தெரியவருகிறது. இப்புகார்களின் அடிப்படையிலும், கடந்த கல்வி ஆண்டில் பல்கலைக்கழகம் நடத்திய திடீர் ஆய்வின் மூலம் பெற்ற அறிக்கைகளின் அடிப்படையிலும், கீழ்க்கண்ட நடைமுறைகளை அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகளும், நடப்பு கல்வி ஆண்டில் (2018-2019) கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் எனப் பல்கலைக்கழகம் அறிவுறுத்துகின்றது.

1. தேசிய ஆசிரியர் கல்விக்குழுமம் அனுமதித்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமித்து, அதற்கு பல்கலைக்கழகத்தின் தகுதி ஒப்புதல் (Staff approval order) பெற்றிருக்க வேண்டும். மேலும், அதன் நகலை, அசல் சான்றிதழ் சரிபார்ப்பின்போது அவசியம் சமர்ப்பிக்கவேண்டும்.

2. தேசிய ஆசிரியர் கல்விக்குழுமம் விதி 7(14) மற்றும் அது வழங்கிய அங்கீகார (Recognition) ஆணையில் குறிப்பிட்டவாறு, சுயநிதி கல்வியியல் கல்லூரிகள், அவர்களது கல்லூரி இணையதளத்தில்(official college website) கல்லூரி தொடர்பான, அனுமதிக்கப்பட்ட பாடம், மாணவர் எண்ணிக்கை (Sanctioned programme along with annual intake) போன்ற அனைத்து விவரங்களையும் பதிவேற்றம்(upload) செய்ய வேண்டும். அவற்றில், குறிப்பாக பல்கலைக்கழகத்திடமிருந்து தகுதி ஒப்புதல் பெற்ற **ஆசிரியர்களின் பெயர், கல்வித்தகுதி, ஊதிய விகிதம் மற்றும் புகைப்படம் ஆகிய விவரங்களை Screen shot- எடுத்து அதன் நகலை அசல் சான்றிதழ் சரிபார்ப்பின்போது அவசியம் சமர்ப்பிக்கவேண்டும்.**

3. தவறான தகவல்களை இணையதளத்தில் கல்லூரிகள் பதிவேற்றம் செய்திருப்பின், அத்தகைய கல்லூரிகளின் அங்கீகாரம்/இணைவு திரும்பப் பெறக்கூடும்.

குறிப்புகள்:- 1. உரிய சான்றிதழ்கள் இன்றி, குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்படும் பி.எட் சேர்க்கை விண்ணப்பங்கள், அசல் சான்றிதழ் சரிபார்ப்பு நாள் அன்றே நிராகரிப்பட்டு, மாணவரின் சேர்க்கை ரத்து செய்யப்படும் என்பது தெரிவிக்கப்படுகிறது.

2. கல்லூரி அலுவலக ரப்பர் ஸ்டாம்ப்பை உடன் எடுத்து வரவும்.

12/9/18

பதிவாளர் (பொ)